பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
04 01 2025 **SATURDAY** 6 45 **AM**
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று கிராமப்புற பாரத திருவிழாவை தொடங்கி வைக்கிறார்.

2. நவீன மருத்துவ முறையுடன் பாரம்பரிய மருத்துவ முறையை ஒருங்கிணைக்கும் வகையில், புதிய சுகாதார கொள்கை வெளியிடப்படவுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் உள்ள அரசு பல் மருத்துவ கல்லூரிகளில் வெளிப்படைத்தன்மையுடன் பணிமாறுதல் கலந்தாய்வு நடைபெற்று வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

4. அரசு திட்டங்களை மக்களிடம் கொண்டுசேர்க்கும் பணியில் அரசு அதிகாரிகளின் பங்களிப்பு அவசியமானது என்று மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

5. இந்தியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து வருகிறது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று கிராமப்புற பாரத திருவிழாவை தொடங்கி வைக்கிறார்.

2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய கிராமப்புற இந்தியாவை உருவாக்குதல் என்ற தலைப்பில் இந்த திருவிழா பாரத் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமப்புற இந்தியாவில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துதல், பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைதல், ஊரக சமூக குழுக்களிடையே புதுமையான கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு, இந்த திருவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று தொடங்கி, வரும் 9ஆம் தேதிவரை ஆறு நாட்கள் நடைபெறவுள்ள இந்த திருவிழாவில் இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் வகையில் கலை நிகழ்ச்சிகளுக்கும், கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<<

நவீன மருத்துவ முறையுடன் இந்திய பாரம்பரிய மருத்துவ முறையை ஒருங்கிணைக்கும் வகையில், சுகாதார கொள்கையில் குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றம் கொண்டுவரப்பட உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், நவீன மருத்துவ முறையை பின்பற்றும் மருத்துவர்கள், நோயாளிகளை ஆயுஷ் சிகிச்சைக்கு பரிந்துரைக்கும் கூட்டு அணுகுமுறை தற்போது பின்பற்றப்பட்டு வருவதாக கூறினார்.

நாட்டில் உள்ள 22 எய்ம்ஸ் மருத்துவமனைகளில் ஆயுஷ் சிகிச்சைப் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பாரம்பரிய மருந்துகளை ஊக்குவிப்பதற்காக ஆயுஷ் அமைச்சகம் 103 நாடுகளுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார்.

பாரம்பரிய மருத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதற்காக உலக சுகாதார நிறுவனம், குஜராத் மாநிலத்தின் ஜாம் நகரில் உலகளாவிய பாரம்பரிய மருத்துவ மையத்தை தொடங்கியுள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<<

இந்த ஆண்டுக்குள் வறுமையில்லாத கிராமங்களை உருவாக்குவதை தமது அமைச்சகம் இலக்காக கொண்டுள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று தமது துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அமைச்சர்களுடன் அவர் நடத்திய ஆய்வுக் கூட்டத்தின் போது இதனை தெரிவித்தார்.

தேசத்தை கட்டமைப்பதில் கிராமப்புறங்களின் பங்கை எடுத்துரைத்த அமைச்சர், உலகில் வலுவான மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க கிராமப்புறங்களின் பங்களிப்பு நிச்சயம் தேவை என்று கூறினார்.

ஊரக வளர்ச்சித் துறையின் பல்வேறு திட்டங்கள் சாமானிய மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும், அவர்களின் கனவுகளை நிறைவேற்றும் விதமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புற வளர்ச்சியில் மத்திய அரசின் அர்ப்பணிப்புமிக்க பணியை இந்த திட்டங்கள் பிரதிபலிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், 136 கோடி வேலைநாட்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்காக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு 50 ஆயிரத்து 467 கோடி ரூபாயை வழங்கியுள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>><<<<<<

தமிழகத்தில் உள்ள அரசு பல் மருத்துவ கல்லூரிகளில் வெளிப்படைத்தன்மையுடன் பணிமாறுதல் கலந்தாய்வு மற்றும் பணிநியமனம் நடைபெற்று வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் 67வது பட்டமளிப்பு விழாவில் பேசிய அமைச்சர், தமிழகத்தில் தற்போது 3 அரசு பல் மருத்துவ கல்லூரிகள் செயல்பட்டு வருவதாக கூறினார்.

பல் மருத்துவத்தில் ஆண்டுதோறும் 2 ஆயிரத்து 200 பேர் பட்டம் பெறுவதாகவும், இவர்களுக்கு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பணிநியமனங்கள் வெளிப்படைத்தன்மையுடன் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

>>>>><<<<<<

சட்டப்பேரவை தலைவர் திரு. அப்பாவு, தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவியை சந்தித்து, பேரவையில் உரையாற்ற வருமாறு அழைப்பு விடுத்தார்.

தமிழக சட்டப்பேரவை வரும் 6ஆம் தேதி தொடங்கவுள்ளது.

இந்த ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்பதால், ஆளுநர் உரையுடன் தொடங்குவது மரபாகும்.

எனவே, ஆளுநர் திரு. ஆர்.என். ரவியை, பேரவைத் தலைவர் திரு. அப்பாவு நேற்று ஆளுநர் மாளிகையில் சந்தித்து, பேரவையில் உரையாற்ற வருமாறு முறைப்படி அழைப்பு விடுத்தார்.

>>>>><<<<<<

அரசு திட்டங்களை மக்களிடம் கொண்டுசேர்க்கும் பணியில் அரசு அதிகாரிகளின் பங்களிப்பு அவசியமானது என்று மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து நேற்று துறை அதிகாரிகளுடன் அவர் ஆய்வு மேற்கொண்ட போது இதனை தெரிவித்தார்.

பட்டா கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீது விரைந்து தீர்வு காண தனித்தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் பரப்பலாறு அணை, நங்காஞ்சி அணை மற்றும் தலைக்குத்து அருவி ஆகிய இடங்களை சுற்றுலா தலமாக மாற்றுவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் 69 பயனாளிகளுக்கு அரசு நடத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

>>>>><<<<<

ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் திருப்பூர் குமரன் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் விரைவில் அமைக்கப்படும் என்று மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், திருப்பூர் குமரன் நினைவாக அரங்கம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருவதாகவும், அறநிலையத்துறை அல்லது வருவாய்த்துறைக்கு சொந்தமான இடத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ், பழுதடைந்த குழாய்களை மாற்ற மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சாமிநாதன் 50 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

பார்வை மாற்றுத்திறனாளிகள் புத்தகங்களை படிக்கும் வகையில் அதனை பிரெய்லி முறையில் வடிவமைத்த லூயிஸ் பிரெய்லி-யின் 216வது பிறந்த தினம் இன்று உலக பிரெய்லி தினமாக கொண்டாடப்படுகிறது

பிரெய்லி முறை பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கு வழிகாட்டியாக திகழ்வதாக சென்னை, பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோர் பள்ளி மாணவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவர்கள் 50 செகண்ட்ஸ்)

>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

சீனாவில் ஃப்ளு காய்ச்சல் காரணமாக, ஏராளமானோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்களில் வரும் செய்திகளுக்கு அந்நாடு மறுப்பு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<<

இந்தியா - ஈரான் நாடுகளுக்கு இடையே வேளாண், வர்த்தகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான அணுகுமுறைகள் குறித்து இரு நாடுகளும் ஆய்வு செய்துள்ளன.

>>>>><<<<<<

போபால் விஷவாயு கழிவுகள் பாதுகாப்பான முறையில் அகற்றப்பட்டுள்ளதாக மத்தியப்பிரதேச மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<<

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியத்தில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளுக்கு மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு மற்றும் குமாரப்பாளையத்தில் நேற்று நடைபெற்ற கலைத்திருவிழாவில் அரசு பள்ளிகளைச் சேர்ந்த இரண்டாயிரத்து 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

>>>>><<<<<<

மயிலாடுதுறை மாவட்டத்தில் மதுவிலக்கு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட 76 வாகனங்களை ஏலம் விட்டதில் அரசுக்கு 28 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வீடு வீடாக சென்று குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புக்கான டோக்கன் வழங்கும் பணி நேற்று தொடங்கியது.

>>>>><<<<<<

தருமபுரி மாவட்டத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் மற்றும் புதிய வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகளை பதிவு அஞ்சலில் அனுப்புவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அம்மாவட்டத்திற்கான வாக்காளர் பட்டியல் பார்வையாளர் திரு. ஆனந்த் குமார் அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தினார்.

>>>>><<<<<<

உதகமண்டலம் அருகே வனவிலங்கு தாக்கி, தொழிலாளர் ஒருவர் உயிரிழந்தது தொடர்பாக வனத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று ஆஸ்திரேலியாவும், அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து வருகிறது.

சிட்னியில் நடைபெறும் இப்போட்டியில், ஒரு விக்கெட் இழப்புக்கு 9 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸை தொடர்ந்து விளையாடி வரும் ஆஸ்திரேலியா சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்புக்கு 78 ரன் எடுத்துள்ளது.

தொடக்க ஆட்டக்காரர் **Sam Konstas** 23 ரன்னுக்கும், **Usman Khawaja, Marnus** தலா 2 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர். **Travis Head** 4 ரன் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இந்திய தரப்பில் பும்ரா, முஹமது சிராஜ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் 185 ரன்.

>>>>>END<<<<<<